இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 264 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 22 – திங்கள்கிழமை 05 மே 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள்  Established : 10.8.1942 - Volume : 83 - Issue 264 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 22 - Monday 05 May 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## எந்தத் தடைகள் வந்தாலும் உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம்! கல்வியுடன்

# மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத்தர வேண்டும்!

## மாநில சுயாட்சி நாயகருக்கு கல்வியாளர்கள் நடத்திய பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, மே 5-**

**மாநில முதல்வர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை நியமிக்கலாம் எனும் உரிமையினை மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மூலம் போராடி பெற்றுத் தந்த மாநில சுயாட்சி நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கல்வியாளர்கள் சார்பில் பாராட்டு விழா நேற்று முன்தினம் சென்னை ஜவகர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது.**

**இவ்விழாவில் பங்கேற்று ஏற்புரை நிகழ்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எந்தத் தடைகள் வந்தாலும், உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம் என்றும் கல்வியுடன் மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத் தரவேண்டும் என்றும் எழுச்சியுரையாற்றினார்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு. தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2025) சென்னை, ஜவகர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற "மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு" விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

மாணவச் செல்வங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களா! மேடையில் இருக்கக்கூடிய எங்களுக்கே டயர்ட் ஆகிவிட்டது. நீங்கள் டயர்ட் ஆகவில்லை – எனர்ஜியோடு இருக்கிறீர்கள். இருந்தாலும், நான் சுருக்கமாக என்னுடைய ஏற்புரையை நிகழ்த்த விரும்புகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று தலைவர் பொறுப்பை ஏற்று உரையாற்றிருக்கக்கூடிய அய்யா ஆசிரியர் அவர்களே,

நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களே,

முன்னிலை ஏற்றுள்ள சகோதரர் அமைச்சர் கோவி செழியன் அவர்களே,

அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

கழக பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களே,

தங்கை திருமதி கனிமொழி, ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தோழமை இயக்கத்தின் தலைவர்கள்

சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்களே,

தோழர் சண்முகம் அவர்களே,

தோழர் முத்தரசன் அவர்களே,

எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன் அவர்களே,

பேராசிரியர் அய்யா காதர் மொஹிதீன் அவர்களே,

மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய கல்வியாளர்கள்

முனிரத்தினம் அவர்களே,

மதிப்பிற்குரிய ஜி.விஸ்வநாதன் அவர்களே,

மேனாள் நீதியரசர் அக்பர் அலி அவர்களே,

அருட்தந்தை அருண் அவர்களே,

டாக்டர் நாராயணசாமி அவர்களே,

ஹரி கே.தியாகராஜன் அவர்களே,

டாக்டர் நந்தினி ரங்கசாமி அவர்களே,

முனைவர் ஜி. ரவி அவர்களே,

முனைவர் ஆறுமுகம் அவர்களே,

முனைவர் ராஜேந்திரன் அவர்களே,

பேராசிரியர் மன்னர் ஜவஹர் அவர்களே,

முனைவர் திருவாசகம் அவர்களே,

பிரின்ஸ் கஜேந்திரன் அவர்களே,

எ.வ.குமரன் அவர்களே,

ஸ்ரீராம், மகேந்திரன், திருமதி மலர்விழி, பீட்டர், சாய் பிரகாஷ் மற்றும் பங்கேற்றிருக்கக்கூடிய பேராசிரியர் பெருமக்களே,

என் பாசத்திற்கும், பேரன்பிற்குரிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

### உங்கள் அன்புக்கும் - நம்பிக்கைக்கும் இன்னும் கடுமையாக உழைப்பேன்!

கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் – பாராட்டுரைகள் வாயிலாகவும் – நீங்கள் பொழிந்த அன்பில் நான் திக்குமுக்காடி விட்டேன் என்றுதான் சொல்லவேண்டும்! நீங்கள் பாராட்டிவிட்டீர்கள் என்று நான் மகிழ்ச்சியின் உச்சத்திற்கு போகவில்லை. உங்களுடைய அன்புக்கும் – நம்பிக்கைக்கும் – எதிர்பார்ப்புக்கும் இன்னும் என்னை தகுதிப்படுத்திக் கொள்ள இன்னும் கடுமையாக உழைக்கவேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் ஏற்படுகிறது!

'மாநில சுயாட்சி நாயகர்' என்று இந்த விழாவுக்கான இன்விடேஷனில் போட்டிருக்கிறீர்கள்.

அது நான் இல்லை! தமிழ்நாட்டு மக்கள்தான்!

"தி.மு.க–வுக்கு வாக்களித்தால் ஸ்டாலின் அமைக்கின்ற ஆட்சி சமூகநீதி ஆட்சியாக, சமத்துவ ஆட்சியாக இருக்கும்; மாநில சுயாட்சிக்கு அவர் உறுதியாக போராடுவார்! இந்தியாவில் கூட்டாட்சிக் கொள்கை வெற்றி பெற இறுதிவரை வாதாடுவார்" என்று நம்பிக்கையுடன் வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள்தான் மாநில சுயாட்சியின் நாயகர்கள்.

என்னைப் பொறுத்தவரைக்கும், வெற்றி என்பது Team work! அதனால்தான், சில நாட்களுக்கு முன்னால், இந்த தீர்ப்புக்கு துணை நின்ற நம்முடைய வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா நடத்தினோம்! இதுதான் Team Effort–க்கான அங்கீகாரம்!

### பாராட்டு விழாவிற்கு ஒத்துக் கொண்டதற்கு காரணம் உச்சநீதிமன்றம் வழங்கிய வரலாற்று தீர்ப்பு தான்!

இந்த சமயத்தில்தான், இந்த தீர்ப்புக்காக பாராட்டு விழா நடத்தவேண்டும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய முனிரத்தினம் அவர்கள் கேட்கிறார் என்று நம்முடைய அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களும் வந்து கேட்டார்கள். பொதுவாக, யாராவது பாராட்டு விழா என்று சொன்னாலே, அதற்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். நேரம் தர மாட்டேன். ஆனாலும், இந்த விழாவுக்கு நான் 'OK' சொன்னதற்கு காரணம் – உச்சநீதிமன்றம் வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புதான்! அது, தனிப்பட்ட ஸ்டாலினுக்காக இல்லை; ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி!

இன்னும் சொல்லவேண்டும் என்றால், இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும், இந்திய மக்களுக்கும் சுப்ரீம் கோர்ட் மூலமாக தமிழ்நாடு பெற்றுத் தந்திருக்கக்கூடிய வெற்றி! இந்த விழா எதற்காக என்றால், உரக்கச் சொல்லப்படாமல் விடப்படும் வெற்றிகளின் அமைதி யில், பொய்களும் – போலிப் பரப்புரைகளும் Chair போட்டு உட்கார்ந்திருக்கும்! அது நாட்டுக்கு நல்லதில்லை! அதனால்தான் இந்த விழா நடக்கின்றது!

### பாராட்டுரை வழங்கிய கல்வியாளர்களுக்கு நன்றி!

இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற நம்முடைய மதிப்பிற்குரிய முனிரத்தினம் உள்ளிட்ட கல்வியாளர்கள் – நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர்கள் – துணைவேந்தர்கள் – பேராசிரியர்கள் – சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு – தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு – அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் – கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி! நன்றி! பங்கெடுத்து பாராட்டுரை வழங்கிய கல்வியாளர்களுக்கும் என்னுடைய நன்றி!

இங்கே நிறைய மாணவர்கள் இருக்கிறீர்கள். நாளைய தலைவர்கள் நீங்கள்! நீங்களே யோசித்துப் பாருங்கள்... C.M. ஆகி மக்களுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டினால், After all, ஒன்றிய அரசின் ஏஜெண்டாக நியமிக்கப்பட்ட Temporary–யாக இங்கே தங்கியிருக்கின்ற ஒரு கவர்னர் அதையெல்லாம் தடுத்து நிறுத்த முடியும் என்றால், மக்கள் போடுகின்ற ஓட்டுக்கு என்ன மரியாதை? எலக்ஷன் எதற்கு நடத்த வேண்டும்?

### எல்லாவற்றையும் செய்து தருவது மாநில அரசு அதிகாரத்தை ஆளுநர் கையிலெடுப்பதா?

ஆளுநர் பதவி என்பது, எந்த பயனும் இல்லாத ரப்பர் ஸ்டாம்ப் போஸ்ட்! நீங்கள் கொஞ்சம் யோசித்து பாருங்கள்... உங்கள் காலேஜ் இருக்கின்ற இடம், மாநில அரசினுடையது! உங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் தருவது மாநில அரசு! மாணவர்களான உங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தருவது, மாநில அரசு! ஆனால், உங்கள் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கின்ற துணை வேந்தரை ஆளுநர் நியமிக்க முடியும் என்றால், அது எந்தவகையில் நியாயம்? அதனால்தான் கோர்ட்டுக்குச் செல்வோம் என்று முடிவு செய்தேன்!

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் பர்த்திவாலா அவர்களும், மகாதேவன் அவர்களும் அடங்கிய அமர்வு அரசியலமைப்பின் வழி நின்று தெளிவான தீர்ப்பை வழங்கி, பல ஆண்டுகளாக நிலவிய ஒரு பிரச்சினைக்கு முடிவு கட்டியிருக்கிறார்கள். எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், பூனைக்கு மணி கட்டியிருக்கிறார்கள்! மாணவர்களான உங்களுக்கே தெரியும்... உங்களுடைய Project Submit செய்வதற்கு Deadline கொடுப்பார்கள்.

உச்சநீதிமன்றம் தந்த வரலாற்று சிறப்புமிகு தீர்ப்பு!

அதுபோல, சட்டமன்றம் பாஸ் செய்த சட்டத்தின் மேல் ஒரு மாதத்திற்குள் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று Dead–line செட் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தத் தீர்ப்பில் என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,

- மசோதாவை நிறுத்தி வைப்பதாக இருந்தால், மூன்று மாதத்திற்குள் அரசுக்குத் தெரிவிக்கவேண்டும்.
- குடியரசு தலைவர் அவர்களுக்கு அனுப்புவதாக இருந்தால் மூன்று மாதத்திற்குள் செய்யவேண்டும்.
- ஒரு பில் இரண்டாவது முறையாக ஆளுநருக்கு வந்தால், உடனடியாக ஒப்புதல் வழங்கவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது.
- தமிழ்நாடு கவர்னர் நிறுத்தி வைத்த 10 மசோதாக்களுக்கும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதல் தந்து தீர்ப்பு வழங்கிவிட்டது.
- ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு வைத்தது மிகப்பெரிய வெற்றி!

### ஆளுநரை விட சட்ட மனிதத்துக்குத்தான் அதிக அதிகாரம்!

"நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசுக்கும் மதிப்பளிக்கின்ற வகையில், ஆளுநர்கள் செயல்படவேண்டும்' என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்! இப்படி ஒரே கல்லில் பல மாங்காய்களை அடித்திருக்கிறோம்! நான் கேட்கிறேன்... பிரதமரின் உரிமையை குடியரசுத் தலைவர் எடுத்துக்கொண்டால் சும்மா இருப்பார்களா? இந்தத் தீர்ப்பு வந்ததும் தாங்கிக்கொள்ள முடியாமல், 'குடியரசு துணைத் தலைவர்' சொல்கிறார்... என்ன சொல்கிறார்.... "நாடாளுமன்றம் பெரிய அதிகாரங்கள் கொண்டது" என்று சொல்கிறார். ஏங்க...! நாங்களும் அதைத்தான் சொல்கிறோம் – சட்டமன்றத்துக்கு, ஆளுநர்களை விட அதிக அதிகாரம் இருக்கிறது!

இதையெல்லாம் நாங்கள் சொல்வதால், நாங்கள் ஆளுநரின் அதிகாரப் போட்டி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். நமக்கும், அவருக்கும் ஏதாவது தனிப்பட்ட பகை இருக்கிறதா? எதுவுமில்லை! இப்போது சமீபத்தில்கூட, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு போயிருந்தேன் – நன்றாகதான் பேசி வந்தோம். அரசியலில் கொள்கை மாறுபாடுகள் இருந்தாலும், மனிதர்களுக்குள்ளே பண்பாடும், நட்புணர்வும் காக்கப்பட வேண்டும்! நாளைக்கே இந்த ஆளுநர் இடத்தில் வேறு யாராவது வந்து, அவர்களும் இதையே செய்தால், அவருடைய செயல்பாடுகளையும் எதிர்க்கத்தான் போகிறோம்!

> **"'மாநில சுயாட்சி நாயகர்' என்று இந்த விழாவுக்கான இன்விடேஷனில் போட்டிருக்கிறீர்கள். அது நான் இல்லை! தமிழ்நாட்டு மக்கள்தான்! "தி.மு.க-வுக்கு வாக்களித்தால் ஸ்டாலின் அமைக்கின்ற ஆட்சி சமூகநீதி ஆட்சியாக, சமத்துவ ஆட்சியாக இருக்கும்; மாநில சுயாட்சிக்கு அவர் உறுதியாக போராடுவார்! இந்தியாவில் கூட்டாட்சிக் கொள்கை வெற்றி பெற இறுதிவரை வாதாடுவார்" என்று நம்பிக்கையுடன் வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள்தான் மாநில சுயாட்சியின் நாயகர்கள்."**

### அதிகார அத்துமீறல்களுக்கு தீர்வுகாணும் போராட்டம்!

ஆனால், நம்மை பொறுத்தவரைக்கும், நம்முடைய உரிமையை எந்தக் காலத்திலேயும் விட்டுத்தர மாட்டோம்! இதுதான் என்னுடைய பாலிசி! ஆனால், என்னைப் பொறுத்தவரைக்கும், தனிப்பட்ட முறையில் கேட்டீர்கள் என்றால், இதே ஆளுநர் தொடரவேண்டும் என்பது தான் என் விருப்பம். இப்படி தொடர்ந்தால் தான் நமக்கு மக்களிடத்தில் இன்னும் செல்வாக்கு வந்து கொண்டே இருக்கும். அவர்களுக்கு செல்வாக்கு போய்க்கொண்டே இருக்கும். செல்வாக்கு இல்லை. அதுவேறு. இந்தத் தீர்ப்பைப் பற்றி, நான் உங்களிடம் விவரிக்க காரணம், எதிர்காலத்தில் நீங்கள் வேலைகளுக்கு போகும்போதோ அல்லது வேறு இடங்களிலோ அதிகார அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டீர்கள் என்றால், நீங்கள் நடத்துகின்ற போராட்டம் என்பது, உங்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்குப் பிறகு வரப் போகிறவர்களுக்கும் தீர்வு சொல்லக் கூடியதாக அமைய வேண்டும்!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

# மூட நம்பிக்கைகளை பரப்புகிற இடமாக கல்வி நிலையங்கள் இருக்கக் கூடாது!